[illegible]
[illegible]
மங்கல நிகழ்வுகளை
நவீன முறையில் வீடியோ
படப்பிடிப்பிற்கு

எவர்விஷன்
21, மணிக்கூட்டு வீதி
யாழ்ப்பாணம்

பக்கங்கள் நான்கு
Registered as a Newspaper

உதயன்

விலை ரூபா 5-00

சுடர்: 9 திருவள்ளுவர் ஆண்டு 2025 சித்திரை 07 புதன்கிழமை (20 - 04 - 1994) UTHAYAN A Lively Natinoal Tamil Daily கதிர் 143

வீடியோ கமரா,
T. V. வீடியோ டெக்
ஆகியவற்றை
உத்தரவாதத்துடன்
உடனுக்குடன்
திருத்திக் கொள்வதற்கு

எவர்விஷன்
21, மணிக்கூட்டு வீதி
யாழ்ப்பாணம்

எல்லாளன் படையின் கொலை மிரட்டலை அடுத்து

வெளிநாட்டு உல்லாசப் பயணிகளுக்கு அந்நாடுகளின் தூதரகங்கள் எச்சரிக்கை!

இங்குவருவதாயின் அவதானமாக நடந்துகொள்ளுமாறு அறிவுறுத்து

கொழும்பு, ஏப்ரல் 20

இலங்கைக்கு விஜயம் செய்வது குறித்து மிக அவதானமாக நடந்து கொள்ளும்படி கொழும்பிலுள்ள ஐரோப்பிய மற்றும் மேற்கு நாடுகளின் தூதுவர்கள் தத்தமது நாட்டுப் பிரசைகளை எச்சரித்துள்ளனர்.

இலங்கைக்கு வரும் உல்லாசப் பயணிகளுக்கு எல்லாளன் படையின் பேரில் கொலை மிரட்டல் விடுக்கப்பட்டதை அடுத்தே இந்த எச்சரிக்கை அறிவுறுத்தல் வெளியிடப்பட்டிருக்கிறது.

''இலங்கைக்கு விஜயம் செய்ய வேண்டாம் என்று எமது பிரசைகளை நாம் கேட்கவில்லை ஆனால் அது குறித்து அவதானமாக நடந்து கொள்ளும்படி அவர்களை நாம் எச்சரித்துள்ளோம்'' — இவ்வாறு அந்நாடுகளின் கொழும்புத் தூதுவர்கள் தெரிவித்துள்ளனர்.

எல்லாளன் படையின் சார்பில் விடுக்கப்பட்டுள்ள எச்சரிக்கை குறித்து —

மேற்கு நாடுகளின் தூதுவர்கள் நேற்று முன்தினம் கொழும்பில் அவசரமாகக் கூடி ஆராய்ந்தனர்; அதன் பின்னர் மேற்படி எச்சரிக்கையை தத்தமது நாட்டுப் பிரசைகளுக்கு விடுப்பது என அவர்கள் தீர்மானித்தனர்.

நிலைமை என்ன என்பதை எமது நாட்டுப் பயணிகளுக்கு முற்றாகத் தெரிய வைப்பது அவசியம் எனத் தாங்கள் கருதுவதாகவும் அவர்கள் தமது கூட்டத்தின் பின்னர் தெரிவித்தனர்.

(உ-எ)

இன்றும் மூடப்பட்டிருக்கும்

யாழ்ப்பாணம், ஏப். 20

அனுமதி வழங்கும் செயலகங்களும், குடும்ப அட்டை பகுதிச் செயலகங்களும், மோட்டார் ஊர்திப் பதிவுச் செயலகமும், விசாரணைப் பகுதிச் செயலகமும், யாழ். — வன்னி தொடர்புச் சேவை செயலகமும் இன்றும் திறக்கப்பட மாட்டா என்பதைப் பொதுமக்களின் கவனத்திற்கு போக்குவரத்துக் கண்காணிப்புப் பிரிவினர் அறியத் தருகின்றனர். [ஒ]

உல்லாசப் பயணிகள் பலர் இலங்கை வருகையை ரத்து

கொழும்பு, ஏப். 20

கொழும்பில் தொடராக இடம்பெற்ற குண்டு வெடிப்புச் சம்பவங்கள் அதனைத் தொடர்ந்து வெளியிடப்பட்டிருக்கும் கொலைப் பயமுறுத்தல் ஆகியவற்றை அடுத்து —

இலங்கைக்குச் சுற்றுலாப் பயணத்தை மேற்கொள்ள விருந்த பலர் தமது பயணத்தை ரத்துச் செய்துவிட்டதாக உல்லாசப் பயணத்துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.

ஆண்டுக்கு 20 கோடி டொலர் (ஏறத்தாழ ஆயிரம் கோடி ரூபா) வருமானத்தைத் தரும் இத்துறை இதனால் பாதிப்புறும் என அவர்கள் கவலை தெரிவித்தனர்.

இதற்கிடையில் —

உல்லாசப் பயணிகளுக்கு கொலைப் பயமுறுத்தலை விடுக்கும் கடிதங்களின் பிரதிகள் கடந்த வாரம் செய்தி நிறுவனங்களுக்கு அனுப்பப்பட்டன என்றும் —

அதேபோன்ற கடிதங்கள் பல ஹோட்டல்களுக்கு அனுப்பப்பட்டுள்ளன என்றும் —

இப்போது தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

இந்த மிரட்டல்கள் குறித்து அரசு ஒரு மௌனக் கொள்கையைக் கடைப்பிடித்து வருவது போல் தெரிவதாக பி. பி. ஸி குறிப்பிட்டது.

இதேசமயம் —

கொழும்பில் வெடிகுண்டு வைத்த நபர் என்று சந்தேகிக்கப்பட்ட ஒருவர் தங்கியிருந்த விடுதியில் வெடி மருந்துகளும் உலோக உருளைகளும் நிரம்பிய சூட்கேஸ் ஒன்று கண்டு பிடிக்கப்பட்டதாக இப்போது தெரிய வந்துள்ளது.

தென்பகுதி தேர்தல் தோல்வியின் எதிரொலி

மாகாணசபை முறை ஒழிப்பு; ஐ. தே. க. தயாராகி வருகிறது

கொழும்பு, ஏப். 20

தென்மாகாணசபைத் தேர்தலில் தோல்வி அடைந்ததைத் தொடர்ந்து மாகாண சபை முறையையே ஒழித்து விட ஆளும் ஐக்கிய தேசியக் கட்சி தயாராகி வருவதாக 'ஹிரு' என்ற சிங்கள வார இதழ் தகவல் வெளியிட்டிருக்கிறது.

தென் மாகாணசபைத் தேர்தலில் வெற்றியீட்டும் பட்சத்தில் அடுத்த பொதுத் தேர்தலுக்கு முன்பதாக காமினி திஸநாயக்க குழுவினரின் ஆதரவுடன் வடமேல் மற்றும் மேல் மாகாண சபைகளை கைப்பற்றுவதற்கு ஐக்கிய தேசியக் கட்சி திட்டம் தீட்டியிருந்தது என்றும் —

தென்மாகாண சபைத் தேர்தல் தோல்வியை அடுத்து மாகாண சபைகளையே ஒழித்து விடுவது என்று அரசாங்கம் எண்ணுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

(ஒ-எ)

ஸ்ரீலங்காப் படையினர் அடாவடித்தனம்:

மட்டு. பனிச்சங்கேணியில் தமிழரின் 15 வீடுகள் தீக்கிரை

வயோதிபர் பலி; 15பேர் படுகாயம்

கொழும்பு, ஏப். 20

மட்டக்களப்பு மாவட்டம்— பனிச்சங்கேணியில் இராணுவத்தினர் தமிழருக்குச் சொந்தமான சுமார் 15 வீடுகளை தீக்கிரையாக்கினர் என்றும்—

படையினர் கண்மூடித்தனமாக மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் வயோதிபத் தமிழர் ஒருவர் கொல்லப்பட்டார் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

படையினர் தமிழர் மீது நடத்திய தாக்குதலில் குறைந்தது பதினைந்து தமிழர் படுகாயமடைந்தனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

அப்பகுதியில் நிலக்கண்ணி ஒன்று வெடித்ததை அடுத்து படையினர் இத்தாக்குதலில் ஈடுபட்டனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

இத்தாக்குதலை நடத்திய படையினர் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்று வழக்கம் போல படை அதிகாரிகள் தெரிவித்ததாக வெரித்தாஸ் வானொலி தெரிவித்தது.

இன்று பிரேரணை

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்துக்கு விதிக்கப்பட்ட தடையை மேலும் இரண்டு ஆண்டுகளுக்கு நீடிக்கும் படி கோரும் தமிழக அரசின் பிரேரணை இன்று சட்டசபையில் எடுத்துக் கொள்ளப்படும் என்று சபாநாயகர் சேடப்பட்டி முத்தையா நேற்று அறிவித்தார். [ஒ-ச]

பினாம்பயானில் தபால் பொதிகள்

நாளை பருத்தித்துறைக்கு வந்து சேரும் 'பினாம்பயான்' கப்பலில் 15 தபால் பொதிகள் எடுத்து வரப்படுவதாக யாழ். பிரதம தபாலதிபர் திரு. எஸ். கோபாலஸ்வரன் தெரிவித்தார்.

வியாழக்கிழமை தோறும் நடைபெறும் இக்கப்பல் சேவையில் தொடர்ந்து தபால் பொதிகள் எடுத்து வரப்படும் என்றும்—

மார்ச் மா [illegible] தபால்களே நாளை வருவதாகவும்—அவர் [illegible]

அன்னை பூபதிக்கு தமிழீழத்தில் பல்லாயிரம் மக்கள் கூடி அஞ்சலி

யாழ்ப்பாணம், ஏப் 20

அன்னை பூபதியின் ஆறாவது ஆண்டு நினைவு தினம், தமிழீழப் பகுதி எங்கும் நேற்று வெகுசிறப்பாக அனுஷ்டிக்கப்பட்டது. இறுதி நாள் உண்ணாவிரத நிகழ்வுகளில் பல்லாயிரக் கணக்கான மக்கள் கலந்து கொண்டு, அன்னையின் தியாகத்தை நினைவு கூர்ந்து, அவருக்கு அஞ்சலி செலுத்தினர்.

யாழ்ப்பாணக் குடாநாட்டின் கிராமங்கள் தோறும் சனசமூக நிலையங்கள், ஆலயங்கள், பொது மைதானங்களில் எல்லாம் ஆங்காங்கே உண்ணாவிரத நிகழ்வுகள் நடைபெற்றன. இவற்றில் பெரும் எண்ணிக்கையான மக்கள் உணர்வு பூர்வமாகப் பங்கு கொண்டனர்.

சமய, சமூக அமைப்புகள், சங்கங்கள் ஆகியவற்றைச் சேர்ந்தவர்களும், பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள், தனியார் வர்த்தக நிலையங்கள், அரச, தனியார் நிறுவனங்களைச் சேர்ந்தவர்களும் ஏனைய பொது மக்களும் உண்ணாவிரதம் அனுஷ்டித்தனர்.

முக்கிய சந்திகள், பொது இடங்கள், வீட்டு முன்றில்கள் மற்றும் பல இடங்களில் வைக்கப்பட்டிருந்த அன்னை பூபதியின் திருவுருவப் படங்களுக்கு சுடர் ஏற்றியும் மலர் தூவியும் மக்கள் அஞ்சலி

[3 ஆம் பக்கம் பார்க்க]

ஐ. தே. க. தலைமைப்பீடம் அழைத்தும்

சிறிசேன கூரே நாடு திரும்பவில்லை

காமினியை அமைச்சராக்கும் டி. பியின் திட்டம் இழுபறி நிலையில்

கொழும்பு, ஏப். 20

வெளிநாடு சென்றுள்ள ஐ. தே. க. பொதுச் செயலாளர் சிறிசேன கூரே ஐ. தே க. தலைமைப் பீடத்தின் அழைப்புக்கு இணங்க நேற்று நண்பகல் வரை நாடு திரும்பவில்லை என்று அறிவிக்கப்படுகிறது.

காமினி திஸநாயக்காவை தேசியப்பட்டியல் எம். பியாக்குவதற்கு அவரது பெயரை தேர்தல் ஆணையாளருக்கு எழுத்து மூலமாக ஐ. தே க. பொதுச் செயலாளர் தான் அறிவிக்க வேண்டியுள்ளது என்றும் —

கட்சியின் உயர் பீடத்தின் அழைப்பை ஏற்று சிறிசேன கூரே கொழும்பு திரும்பாவிடின் கட்சியில் நிலவும் உட்பூசலையும் காமினிதிஸநாயக்காவுக்கு எதிரான அணியின் வலிமையையும் அது தெளிவாக்கும் என்றும்—

அரசியல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

காமினி திஸநாயக்காவுக்கு நாடாளுமன்றத்தில் இடமளிப்பதற்காக தேசியப்பட்டியல் எம். பியான அலெக் றொபர்ட்ஸன் தமது பதவியை ராஜினாமாச் செய்ய முன்வந்துள்ளார் என்றும்—

அந்த இடத்துக்கு இன்று காமினியை எம். பியாக நியமிக்க ஜனாதிபதி திட்டமிட்டிருந்தார் என்பதும் தெரிந்தவையே.

ஜனாதிபதி விஜேதுங்கா கட்சியில் சர்வ வல்லமையுடையவரெனச் சிலர் கருதினாலும் அவர் தமது விருப்பப்படி செயல்படும் வல்லமை இல்லாதவர் என்பதை காமினி விஷயம் சுட்டிக்காட்டும் என்றும் அரசியல் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இதேவேளை— காமினிதிஸநாயக்காவை எம். பியாக்கும் முயற்சி மேலும் தாமதமாகுமானால்—

ஜனாதிபதி விஜேதுங்கா நிச்சயமாக சிறிசேன கூரேக்கு பதிலாக மாற்று முடிவுகளை எடுப்பாரெனவும் தெரிவிக்கப்படுகிறது.

அத்தகைய நிலை ஏற்படின் ஐக்கிய தேசியக் கட்சியின் பலம் பெருமளவுக்குக் குறை

(3 ஆம் பக்கம் பார்க்க)

முச்சந்தி முரளி



சப்பாத்துக்கு ஏத்த மாதிரி காலை வெட்டுறநிலை அரசாங்கக்காரர் பலே கெட்டிக்காரர் பாருங்கோ......!

கிளாலி - பூநகரி படகுச் சேவை

யாழ்ப்பாணம், ஏப். 20

கிளாலி — பூநகரி படகுச் சேவை இன்று புதன்கிழமை வழமையான நேரத்தில் நடைபெறும் என்று விடுதலைப் புலிகளின் அரசியல் துறையினர் அறிவித்துள்ளனர். (ஒ-3)

கோபாலசாமி அணியின் ஆதரவாளர் படுகொலை!

தி- மு. க, பிரமுகர்கள் கைது!!

சென்னை, ஏப். 20

வை. கோபாலசாமி தலைமையிலான தி. மு. கவின் தீவிர ஆதரவாளரான ஏழுமலை என்பவர் படுகொலை செய்யப்பட்டார்.

இது தொடர்பாக தி மு.கவின் முன்னாள் எம். எல். ஏயான மதிவாணனும் அவரது ஐந்து ஆதரவாளர்களும் நேற்று சென்னை பொலீஸாரால் கைது செய்யப்பட்டனர்.

நேற்று முன்தினம் இரவு வட சென்னை இராயபுரத்தில் உள்ள தனது இல்லத்துக்கு அருகே 20 பேரடங்கிய கும்பல் ஒன்றினால் ஏழுமலை வெட்டிக் கொல்லப்பட்டார்.

கடந்த சனியன்று சென்னையில் நடந்த கோபாலசாமியின் தி. மு கப் பேரணியை ஒழுங்கு செய்த முக்கிய புள்ளிகளில் ஏழுமலையும் ஒருவர். கோபாலசாமியின் பேரணி தி.மு கவுக்கு அதிர்வு தரும் ஒன்றாக அமைந்தது தெரிந்ததே.

கடற்படை சூட்டுக்கு குருநகர் இளைஞர் பலி

இரு நாட்களின் பின் சடலம் மீட்பு

யாழ்ப்பாணம், ஏப் 20

பூநகரி—கல்முனைக் கடற்பகுதியில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு கடற்படையினர் தாக்குதல் நடத்தியபோது காணாமற் போனதாகக் கருதப்பட்ட இளைஞர் நேற்று சடலமாக மீட்கப்பட்டார்.

அன்றைய தினம் இவருடன் மீன்பிடிக்கச் சென்ற மற்றைய இருவரும் தாக்குதலில் இருந்து தப்பி நீந்திக் கரை சேர்ந்து இருந்தனர்.

இரு நாட்களின் பின் நேற்று கரை ஒதுங்கிய சடலத்தை உறவினர்கள் யாழ். ஆஸ்பத்திரியில் ஒப்படைத்தனர். சடலத்தில் துப்பாக்கிச் சூட்டுக் காயங்கள் காணப்பட்டன.

[illegible] சேர்ந்த சேவியர் மரியதாஸ் கபேட்சிறி (17 வயது) என்பவரே மரணமானவர் [illegible]

[ஒ-17-51-15]

சாவகச்சேரி மகளிர் கல்லூரி

மாணவருக்கு தலைவரின் பரிசு வழங்கப்பட்டது

யாழ்ப்பாணம், ஏப். 20

அன்னை பூபதி நினைவுப் பொது அறிவுத் தேர்வில் ஆறாம் ஆண்டுப் பிரிவில் தோற்றி தென்மராட்சிக் கோட்டத்தில் முதலாம் இடத்தைப்பெற்ற சாவகச்சேரி மகளிர் கல்லூரி மாணவன் விவேகானந்தன் கோகுலனுக்கு தேசியத் தலைவர் சிறப்புப் பரிசு வழங்கியுள்ளார்.

தமிழீழக் கல்விக்கழக நடுவப் பணியகத்தில் வைத்து நேற்று மாலை தேசியத் தலைவரின் சிறப்புப்பரிசு 5 ஆயிரம் ரூபாவை — தமிழீழ கல்விக் கழகத் துணைப் பொறுப்பாளர் திரு. வே. பாலகுமாரன் வழங்கினார்.

நேற்றுக்காலை உரும்பராயில் உள்ள அன்னை பூபதி கலையரங்கில் மாணவர் அமைப்பினால் நடத்தப்பட்ட பொது பரிசளிப்பு விழாவிலும் கோகுலன் பரிசில் பெற்றார். (ஒ-3)

ஏறாவூரில் இரு முஸ்லிம்கள் ஆயுதங்களுடன் கைது

கொழும்பு, ஏப். 20

ஏறாவூர்ப் பிரதேச சபையின் தலைவரைச் சுட்டுக் கொலை செய்வதற்கு முயற்சித்தவர்கள் என்று சந்தேகிக்கப்படும் இரு நபர்களை ஆயுதங்களுடன் ஏறாவூர்ப் பொலீஸார் கைது செய்தனர் என்று அறிவிக்கப்படுகிறது.

அந்த இரு நபர்களும் முஸ்லிம் அமைப்பு ஒன்றைச் சேர்ந்தவர்கள் என்று கூறப்படுகிறது. [ஒ-எ-6]

நாளை வரும் நரோமா மாலை திரும்பிச் செல்லும்

யாழ்ப்பாணம், ஏப் 20

திருகோணமலையில் இருந்து ஒரு தொகுதி பயணிகளுடன் நாளை காலை காங்கேசன்துறைக்கு வந்து சேரும் 'நரோமா' கப்பல் பயணிகளுடன் நாளை மாலையே திருகோணமலைக்குத் திரும்பிச் செல்லவிருப்பதாக யாழ். அரச அதிபருக்கு நேற்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இக்கப்பலில் செல்வதற்கு பெயர் பதிவு செய்தவர்களை நாளை நண்பகல் 12 மணிக்கு முன்னர் பருத்தித்துறை துறைமுகத்தில் சமுகமளிக்குமாறும்—

இக்கப்பலில் செல்ல பெயர் பதிவு செய்து பணம் செலுத்தாதவர்கள் இன்று நண்பகல் 12 மணிக்கு முன்னர் செயலகத்தில் பணம் செலுத்துமாறும் — யாழ். அரச அதிபர் கேட்டுள்ளார். [ஒ-3]

சின்னஞ் சிறு விளம்பரம்

விற்பனைக்கு

பைபர்லொஸ் மேசை கதிரை, செற்றி விற்பனைக் குண்டு. செ. செல்லத்தம்பி, நீதிமன்ற ஒழுங்கை, மன்னார். [7077]

கண்ணாடி சோக்கேஸ்கள், மர ராக்கைகள் விற்பனைக்கு உண்டு. விபரங்களுக்கு சஜன் வாச் வேக்ஸ், இல. 12, ஸ்ரேசன் றோட், சுன்னாகம். (7320)

மெஷின் மைண்டர்கள்

அனுபவம் உள்ள பிளேற் றில் மெசின்மைண்டர்கள் தேவை. கொம்போசிங், பைண்டிங் தெரிந்தவர்கள் விரும்பத்தக்கது. நேரில் வரவும். மலேஷி அச்சகம், சத்திரச்சந்தி யாழ்ப்பாணம். (7321)

தேவை

ஒப்புநோக்குநர், அச்சுக் கோப்போர் தேவை. தமிழில் பாண்டித்தியம் உடையவரும் ஒப்புநோக்குவதில் நிபுணரும், அச்சக ஒழுங்கு விதிகளுக்கு அமைய நடந்து கொள்ளக் கூடியவரும் வேண்டும்: தமிழில் அச்சுக் கோக்கும் திறமைசாலிகளும் உடன் தேவை. இல 571, மானிப்பாய் வீதி, ஓட்டுமடம், யாழ்ப்பாணம். (30441)

தேவை

இறைச்சிக் கோழிகள் தேவை. உடன் தொடர்பு கொள்ளவும்: நல்லூர் வீடியோ சென்ரர், 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (30485)

கணக்கியல், கணக்காய்வுப் பயிலுனர் தேவை. கணக்கியலைப் பாடமாகக் கொண்டு க. பொ. த. உயர்தரப் பரீட்சை அல்லது வேறு உயர் பரீட்சையில் சித்தியடைந்தவர்கள் இல. 140, பலாலி வீதி, திருநெல்வேலிக் காரியாலயத்திற்கு விண்ணப்பிக்கவும். (30480)

பாதுகாப்புத் துறையில் அனுபவம் உள்ளவர்கள் உடன் தேவை. நற்சாட்சிப் பத்திரங்களுடன் நேரில் வரவும். நஷனல் பாதுகாப்புத் திட்டம், 181/1, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (30481)

சோதிடம்

பரீட்சையில் சித்தியா? உத்தியோகம் கிடைக்குமா? வியாபாரம் சிறக்குமா? விவசாயம் விருத்தியாகுமா? விவாகம் நடைபெறுமா? உங்கள் வினாக்களுக்கு உடனே விடை கிடைக்கும்! இன்றே கேட்டுப்பாருங்கள்!! த. சிவானந்தன், பிரபல சோதிடர், ஆனந்தா சோதிட நிலையம், 384, கோயில் வீதி, நல்லூர் வடக்கு. (முடமாவடிச் சந்தி) (30446)

O/L மாணவர்களுக்கு

தமிழ் மூலம் ஆங்கில பயிற்சிகள் வகுப்பு வாரி தமிழாக்கம் செய்யப்பட்ட கடந்த கால வினாத்தாள்கள், மாதிரி வினாத்தாள்கள் மற்றும் தமிழ் மூலம் ஆங்கில பயிற்சிகள். ஆக்கம்: Mr. K. இன்பமோகன் விலை 25/-. விற்பனையாகிறது. பூபாலசிங்கம் புத்தகசாலை, யாழ்ப்பாணம். (சி-7820)

தூக்கு மேடைக் குறிப்பு

பெர்லினில் தூக்கிலிடப்பட்ட ஜூலியஸ் பூசிக் சிறையிலிருந்தபோது எழுதப்பட்ட சிறைக்குறிப்புகள் விற்பனையாகிறது. வசந்தம் புத்தக நிலையம். (7325)

வீடு வாடகைக்கு தேவை

பிறவுண் றோட், கந்தர்மடம் நல்லூர் பகுதியைச் சுற்றாடலில் மூன்று படுக்கை அறையுடன் சகல வசதிகளும் உடைய வீடு வாடகைக்கு தேவை. முற்பணம் கொடுக்கப்படும். தொடர்பு கொள்ளவும். இ. இராஜரட்ணம் 7, கச்சேரி கிழக்கு ஒழுங்கை, சுண்டிக்குளி (30482)

இலக திருமண சேவை

33 வயது, அச்சுவினி, செவ்வாய் 8, இத்தாலியில் தொழில்புரிபவருக்கு மணப்பெண் தேவை. திருமணம் இலங்கையில் செய்து அமைக்கலாம். தொடர்பு: ஞாயிறு, செவ்வாய் காலையும் புதன் ம. விமலா, நாச்சாயடி. (30472)சி

வெளிவந்துவிட்டது -

விற்பனையாகின்றது

ஆங்கில உதவி ஆசிரியர் பரீட்சைக்கான வழிகாட்டி

ENGLISH TEACHERS EXAM GUIDE

8 வருடங்கள் நடைபெற்ற பரீட்சை வினா - விடைகள்

(எல்லாப் புத்தகசாலைகளிலும் பெற்றுக் கொள்ளலாம்)

வெளியீடு: **அஸ்ரன் பதிப்பகம்**

[சி-8008]

தாய்மார்களுக்கு மகிழ்ச்சியான செய்தி

பளிச்சிடும் வெண்மைக்கு

றோயல் நீலம்

கடைகளில் விற்பனையாகும் நீலப் பக்கெட்டுகளைப் போல, போலி நீலம் இல்லையென தமிழீழத்தில் உத்தரவாதத்துடன் விற்பனையாகின்றது

100 ஆடைகளுக்கு ஒரு பக்கெட் போதுமானது. றோயல் நீலம் ஒரு பக்கெட் 6/50 மட்டுமே.

சந்தைப்படுத்துவோர்:

றோயல் இன்டஸ்றிஸ்,
பொன்னையா ஒழுங்கை,
ஆனைக்கோட்டை.

(சி-7767)

BITSMANS

கல்வி நிறுவனம் மானிப்பாய்

புதிய பிரிவு **A/L 96**

கலை, வர்த்தகம்

பொருளியல்	—	உதயன்
வர்த்தகம்	—	தேவா
கணக்கியல்	—	ராஜன்
அளவையியல்	—	S. S. மனோகரன்
தமிழ், இந்துநாகரிகம்	—	என். பாலா
புவியியல்	—	இக்னேசியஸ்
இந்துசமயம்	—	என். கிருஷ்ணா
கிறிஸ்தவம்	—	பிரபல ஆசிரியர்

ஆரம்பம்: 21 - 04 - 1994
வியாழன் 8-00 மணி

O/L DAY CLASS

எமது வழமையான ஆசிரிய குழுவினால்

ஆரம்பம்: 21 - 04 - 1994
வியாழன் 8-00 மணி

SPOKEN ENGLISH

BY: M. A. ஷரீ
நடைபெறுகின்றன.
சனி, ஞாயிறு 4 00 p. m

[சி-7785]

ஓராண்டு நிறைவு நினைவுகளில்

மலர்வு: 10 – 03 – 1969

உதிர்வு: 20 – 04 – 1993

செல்வி இராஜினி இரட்ணம்

(உயிரியல் பிரிவு - யாழ் பல்கலைக்கழகம்)

வளாகத்து வளைவுகளில் - உன்
வரவுகளை எதிர்பார்த்து - நாம்
காத்திருந்தது……… ஒரு காலம்…………
நிகழ்காலம் இருண்டிருந்தும்
எதிர்காலம் ஒளிர்வதற்காய்
சவால்களை ஏற்று - நீ
சிரித்ததுவும் சிலகாலம்
உன்……… சின்ன இதயத்தின்
சிதறாத உறுதியை
வியந்து நாம் நின்ற போது
எம்மை
விழிக்க வைத்து விட்டு
விழிமூடிக் கொண்டாய்
விடிந்ததும் மறந்து விடும்
கனவல்ல உன் கதை
ஆதலால்……… எம்
உணர்வுகள் உள்ளமட்டும்
உன் நட்பும் எம்மோடு…………

பிரிவின் சுமையில்;

3 ஆம் வருட உயிரியல் பிரிவு
நண்பர்கள், நண்பிகள்,
யாழ். பல்கலைக்கழகம்.

[30476]

விக்னா கல்வி நிறுவனம்

52, ஸ்ரான்லி றோட் யாழ்ப்பாணம்.

O/L DAY CLASSES

(8-30—2-00)

ஆரம்பம்: 21 — 04 — 1994 (வியாழன்)
காலை 8-30 மணி

- ★ கடமை கட்டுப்பாடுடன் நடத்தப்படும்.
- ★ மாதாந்த பயிற்சிப் பரீட்சை நடத்தப்படும்:
- ★ ஒவ்வொரு வகுப்புகளிலும் குறிப்பிட்ட மாணவர்களே அனுமதிக்கப்படுவர்:
- ★ அனுமதியினை முன்கூட்டியே பெற்றுக் கொள்ளலாம்.

(சி-8004)

BITSMANS

கல்வி நிறுவனம் மானிப்பாய்

புதிய பிரிவு **96 A/L DAY CLASS**

எமது வழமையான "SUPER GRADE" ஆசிரிய குழுவினால்

ஆரம்பம்: 21 - 04 - 1994
வியாழன் 8 00 மணி

[சி-8016]

வட இலங்கை

தொழில் நுட்பக் கல்லூரி

DIPLOMA IN COMPUTER PROGRAMMING BASIC LANGUAGE

ஆரம்பம்:
வார இறுதி நாள் **23-04-1994**
வார நாள் **27-04-1994**

- ★ G. W. Basic or B. B. C. Basic
- ★ கூடிய செய்முறைப் பயிற்சி
- ★ திறமையான மாணவர்களுக்கு விசேட பயிற்சிகாலம்
- ★ புதிய நெறி கிளை நிறுவனங்களிலும் ஆரம்பமாகின்றன

விபரங்களுக்கு:

NORTH CEYLON TECHNICAL INSTITUTE

14 St. PETER'S LANE,
JAFFNA.

சிறுப்பிட்டி வடக்கு,
நீர்வேலி.

உரும்பிராய் தெற்கு,
உரும்பிராய்.
(தலைமையகத்தில் தொடர்பு கொள்ளவும்.)

(சி/8012)

31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

ஜோசவ் குணநாயகம் இராஜேந்திரம்

[பிரதி பிரதம உள்ளக கணக்காய்வாளர் காங்கேசன் சிமெந்துத் தொழிற்சாலை]

மலர்வு: 11 — 12 — 1940

உதிர்வு: 21 — 03 — 1994

அன்பின் திருவுருவாய், பண்பின் பிறப்பிடமாய், நாட்டின் பற்று நிறைந்தவராய் வாழ்ந்து காட்டிய எம் இதயத் தெய்வமே! நீங்கள் மறைந்தாலும் உங்களின் பரிவும் பாசமும் எங்கள் மனதை விட்டு அகலாது.

எங்கள் அன்புத் தெய்வத்தின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திப்பதுடன், அன்னாரின் இறுதிக் கிரியைகளில் பங்குபற்றி உதவி புரிந்த சிமெந்து தொழிற்சாலை ஊழியர்களுக்கும், சம்பத்தரிசியார் கல்லூரி பழைய மாணவர்களுக்கும், Y's Men's கழகத்தினருக்கும், திருக்குடும்ப கன்னியர்மட பழைய மாணவிகளுக்கும், பரியோவான் கல்லூரி, சுண்டிக்குளி மகளிர் கல்லூரி அதிபர், ஆசிரியர், மாணவர்களுக்கும், புனித அன்னமாள் ஆலய மரியாளின் கூட்டத்தினருக்கும், மாணவர்களுக்கும், குருக்கள், கன்னியாஸ்திரிகளுக்கும், உறவினர்கள், நண்பர்களுக்கும், எங்களது உளங்கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அன்னாரின் ஆத்ம சாந்திக்காக இன்று (20-04-94) புதன்கிழமை பரிசுத்த மரியன்னையின் தேவாலயத்தில் காலை 10 30 மணிக்கு திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.

பிரிவால் துயருறும்,
அன்பு மனைவி, பிள்ளைகள்.

சுண்டிக்குளி.

[3 0484]

விக்னா கல்வி நிறுவனம்

52, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்.

கலை, வர்த்தகம்

96 EVENING CLASSES

(4-00 — 6-00)
(மாலை வகுப்புகள்)

புதிய வகுப்பு: 21 - 04 - 1994
4-00 மணி

பொருளியல்	—	திரு. கலாகரன்
கணக்கியல்	—	திரு. S. K. பிரபாகரன்
வர்த்தகம்	—	திரு. வரதன்
அளவையியல்	—	திரு. A. பிரபா
தமிழ்	—	திரு. குழந்தை
இந்து நாகரிகம் இந்து சமயம்	—	திரு. காரை சுந்தரம்பிள்ளை
புவியியல்	—	திரு. குணராசா
அரசியல்	—	திரு. சீலன்
வரலாறு	—	திரு. சிறீதரன்

- ★ மாணவர்களின் நலன் கருதியே இவ் வகுப்பு ஆரம்பமாகின்றது.
- ★ அனுமதிகள் முன்கூட்டியே பெற்றுக்கொள்ளவும்

(சி/7772)

தென்னை பெருந்தோட்டச் செய்கை மேம்பாட்டுப் பணிகளின் மேற்பார்வையாளர்கள் தேவை

பச்சிலைப் பள்ளிப் பகுதியில் தென்னந் தோட்டங்களின் மேம்பாட்டுப் பணிகளில் ஆர்வத்துடன் செயற்படக் கூடியவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

ஆகக்குறைந்த கல்வித் தகைமை:

க. பொ. த. சாதாரண தகைமைத் தேர்வில் அல்லது தமிழீழப் பொதுக் கல்வித் தேர்வில் ஒரே தடவையில் ஆறு பாடங்களில் தேர்ச்சியடைந்திருப்பதுடன் குறிப்பாக தமிழ், கணிதம் ஆகிய பாடங்களில் திறமைத் தேர்ச்சி பெற்றிருத்தல் வேண்டும்.

அகவை:

20 ஆண்டிற்கு மேற்பட்டவர்களாகவும், 40 ஆண்டிற்கு உட்பட்டவர்களாகவும் இருப்பது விரும்பத்தக்கது.

மேற்படி பணி தொடர்பான பட்டறிவுடையவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

ஊதியம் திறமைக்கும், தகைமைகளுக்கும் ஏற்ப முடிவு செய்யப்படும்.

விண்ணப்ப முடிவு நாள்: **25 — 04 — 1994**

விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி:

பொறுப்பாளர்,
பெருந்தோட்டம், நிதித்துறை,
புலோப்பளை, பளை.

[சி-7787]

சுன்னாகம் பல நோ. கூ. சங்கம் (வ-து)
சுன்னாகம்

வங்கிச்சேவைகள் முகாமையாளர்

கு. இல.: 111: 07

மேற்படி பதவிக்கு யாழ். மாவட்டத்தில் வசிக்கும் தகுதிவாய்ந்த விண்ணப்பதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

சம்பளத்திட்டம்:- ரூ. 1105 — 2170/- (60X4, 75X11)

இத்துடன் சங்கத்தால் வழங்கப்படும் சகல அலவன்ஸ்களும் வழங்கப்படும்.

கல்வித்தகைமை:-

அ. கூட்டுறவுப் பணியாளரின் 8 ஆவது சம்பளத் திட்டத்தில் 1005 — 1705/- (40X5, 50X10) அத்துறையில் முகாமை/ மேற்பார்வை மட்டத்திலான பதவியில் மூன்று வருடங்களுக்கு குறையாத அநுபவம் அல்லது கூட்டுறவுப் பணியாளரின் 9வது சம்பளத் திட்டத்தில் 905/- — 1605/- (40X5, 50X10) அத்துறையில் முகாமை/ மேற்பார்வை மட்டத்திலான பதவியில் ஆறு வருடங்களுக்கு குறையாத அனுபவம், அல்லது

ஆ. இலங்கை வங்கிச்சேவை நிறுவனத்தின் டிப்ளோமா பரீட்சையில் பகுதி I இல் சித்தியுடன், வர்த்தக வங்கித் தொழிலில் இரு வருடங்களுக்குக் குறையாத அனுபவமும், அல்லது

இ. அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழகம் ஒன்றின் பட்டதாரி அல்லது அதற்கிணையான தகைமைகளுடன் வர்த்தகவங்கித் தொழிலில் இரு வருடங்களுக்குக் குறையாத அனுபவம், அல்லது

ஈ. கூட்டுறவுப் பணியாளர் தராதரப் பத்திரம் (உயர்தரம்), / க.பொ.த. (உயர்தரம்) பரீட்சையில் 03 பாடங்களிலான சித்தியுடன் வங்கித்துறையில் மேற்பார்வை மட்டப் பதவியில் ஆறு வருடங்களுக்கு குறையாத அனுபவமும்,

வயது:- விண்ணப்ப முடிவு திகதியன்று 23 வயதுக்கு குறையாமலும், 40 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

பிணை:- ரொக்கப் பிணை — ரூ 4 420/-
ஆதனப் பிணை — ரூ 15,000/-

விண்ணப்ப முடிவு திகதி:- 5-5-94

விண்ணப்பப் படிவத்தையும், ஏனைய மேலதிக விபரங்களையும் ரூபா 10/- செலுத்தி, சங்க வேலை நாட்களில், காரியாலயத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

- பொது முகாமையாளர்

சுன்னாகம் பல நோ கூ. சங்கம்,
சுன்னாகம்.

[சி/2086]

உதயன்
192/2, நாவலர் வீதி
யாழ்ப்பாணம்

சர்வாதிகார வித்து!

ஸ்ரீலங்காவில் ஜனாதிபதி மற்றும் நாடாளுமன்றத் தேர்தல்களை நடத்தாமல் தவிர்ப்பதற்கான யோசனை ஒன்றை அமைச்சர்கள் சிலர் கொண்டிருப்பதாகத் தகவல்கள் வெளியாகி உள்ளன. இப்போது பதவியில் உள்ள ஜனாதிபதி விஜேதுங்காவும், நாடாளுமன்ற உறுப்பினர்களும் இன்னும் ஒரு முறை — மேலும் ஆறு ஆண்டுகளுக்கு — தொடர்ந்து பதவி வகிக்க மக்களின் விருப்பத்தைப் பெறுவது என்பதே அந்த யோசனையாகும்.

அதாவது ஜனாதிபதியின் பதவிக் காலத்தையும், நாடாளுமன்றத்தின் பதவிக் காலத்தையும் நீடிப்பதற்கு சர்வசன வாக்கெடுப்பு ஒன்றை நடத்தவேண்டும் என்று அவர்கள் அரச உயர்பீடத்துக்கு ஆலோசனை தெரிவித்திருக்கிறார்கள்!

அரசமைப்புச் சட்டத்தின் பிரகாரம் ஜனாதிபதி விஜேதுங்காவின் பதவிக் காலம் இவ்வருடம் டிசம்பரில் முடிவடைகிறது. நாடாளுமன்றத்தின் பதவிக்காலம் அடுத்த வருடம் பெப்ரவரியில் முடிவடைகிறது. ஆகையால் ஜனாதிபதி தேர்தல் இவ்வருடம் நவம்பர் மாதத்துக்குப் பிந்தாமலும், நாடாளுமன்றத் தேர்தல் 1995 ஜனவரிக்குப் பிந்தாமலும் நடத்தப்பட வேண்டும்.

தென்மாகாண சபைக்குப் புதிதாகத் தேர்தல் ஒன்றை நடத்த வேண்டும் என்ற நிலைமை தோன்றுவதற்கு முன்னர், 1994 தேர்தல் ஆண்டு என்றும் ஜனாதிபதி மற்றும் நாடாளுமன்றத் தேர்தல்கள் வருட இறுதியில் நடைபெறும் என்றும் அரசாங்கத் தரப்பில் தெரிவிக்கப்பட்டது. தேர்தல் செலவைக் குறைப்பதற்காக இரண்டு தேர்தல்களையும் ஒரே நாளில் நடத்துவது என்ற யோசனையும் முன்வைக்கப்பட்டது. ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் அதற்கு ஆதரவு தெரிவித்திருந்தது.

தென்மாகாண சபைத் தேர்தல் அறிவிக்கப்பட்ட பின்னர், அதில் ஐக்கிய தேசியக் கட்சி வெல்லும் என எதிர்பார்த்து பிரதான தேர்தல்களில் ஒன்றையாவது மே மாதத்தில் நடத்துவதற்கு அரசு உத்தேசித்தது.

ஆனால் தென்மாகாண சபைத் தேர்தலில் தோல்வி கண்டதும் அரசாங்கத்தின் சிந்தனைகள், திட்டங்கள் எல்லாம் அடுத்த வளமாக மாறி விட்டன. பிரதான தேர்தல்கள் இரண்டிலும் ஐக்கிய தேசியக் கட்சி தோல்வியடையும் என்ற அச்சம் ஆட்சி பீடத்தில் உள்ளவர்களைக் கதி கலங்க வைத்துள்ளது.

கட்சிக்குள் உட்பூசல்களும், பிளவுகளும், பிரிவுகளும், அணி சேர்தல்களும் அதிகரித்து விட்டன. பல வகைகளாலும் பலவீனமுற்று வரும் அக்கட்சியை மக்கள் தேர்தலில் நிராகரிப்பார்கள், தோற்கடிப்பார்கள் என்பதற்கான சாதக நிலையே வெளிச்சமாகத் தெரிகிறது.

இத்தகைய சூழ்நிலையில் தான், பிரதான தேர்தல்கள் இரண்டையும் தவிர்த்து, தடுத்து, சர்வசன வாக்கெடுப்பை நடத்தி தமது பதவிகளைத் தக்க வைத்துக் கொள்வதற்கு ஆட்சியில் உள்ளோர் திட்டமிடுகின்றனர். ஜே. ஆர். ஜெயவர்த்தனா 1982 இல் காட்டிக் கொடுத்த முன்னுதாரணத்தைப் பின்பற்ற முனைகிறார்கள்!

ஜனநாயகம் பற்றி பெரிதாகப் பீற்றிக் கொண்டு தமது விருப்பப்படி ஆட்சியை மாற்றும் மக்களின் உரிமைக்குத் தடைபோட உத்தேசிக்கிறார்கள். இது சிங்கள மக்களுக்குச் செய்யும் பெரும் துரோகமாக அமையும். சனநாயகத்தின் முதன்மையான உரிமையைப் பறிப்பதாகும். சர்வதிகாரத்துக்கு வித்திடுவதாகும்.

ஜனநாயக வரன்முறையின்படி அரசாங்கம் மக்களால் ஆனது, மக்களுக்கானது! மக்களுடையது. ஆனால் ஸ்ரீலங்காவைப் பொறுத்த வரை அந்த வரைவிலக்கணம் அரசாங்கம் அரசியல்வாதிகளுடையது; அரசியல் வாதிகளுக்கானது ஆகிவிட்டது!

அரசியல்வாதிகள் தமது பதவிகளில் நீண்ட காலத்துக்குத் தொடர்ந்து அவற்றின் சுகபோகங்களை அனுபவிப்பதற்காகவே அரசும், ஆட்சியும் என்றாகி விட்டது. பாவம் சிங்கள மக்கள்! பரிதாபத்துக்கு உரியவர்கள்!

அராலி வயல்களில் கடல்நீர் புகுவதைத் தடுக்க முயற்சி

அராலி, ஏப். 20

அராலிப் பகுதியில் கடல் நீர் உட்புகுவதால் பயிர்ச் செய்கைக்கு உட்படுத்தப்படாது இருந்து வரும் நூற்றுக்கணக்கான ஏக்கர் வயல் நிலங்களில் அடுத்த பெரும் போகத்தில் பயிர்ச்செய்கையை மேற்கொள்வதற்குத் தேவையான நடவடிக்கைகளை வலி மேற்கு பிரதேச செயலாளர் எடுத்துவருவதாக அறிவிக்கப்படுகிறது.

இப்பிரதேசத்தில் கடல்நீர் உட்புகுவதைத் தடுப்பதற்காக நீர்ப்பாசனத் திணைக்களத்தின் உதவியுடன் தடுப்பு அணை அமைக்கும் முயற்சியும் மேற்கொள்ளப்படவுள்ளது என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இத்திட்டத்துக்குத் தேவைப்படும் நிதியை 1994ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட நிதியில் இருந்து ஒதுக்குவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (எ-12)

யாழ். தொலைத் தொடர்புப் பகுதி

9 பெண் ஊழியர்களுக்கு இடமாற்ற உத்தரவு

யாழ். மாவட்ட தொலைத் தொடர்புப் பகுதியைச் சேர்ந்த ஒன்பது பெண் தொலை பேசி பணியாளர்களுக்கு உடனடி இடமாற்ற உத்தரவுக் கடிதங்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

94 ஏப்ரல் முதலாம் திகதிக்கு முன்னதாக மன்னார், வவுனியா, திருகோணமலை ஆகிய தொலைத் தொடர்பு அலுவலகங்களில் கடமைகளைப் பொறுப்பேற்றுக் கொள்ளுமாறு இவர்களுக்கு தலைமைக் காரியாலயத்தினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ள கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவர்களுக்கு சென்ற வருட முற்பகுதியிலும் இவ்வாறான இடமாற்ற உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்ட போதிலும் மேல்முறையீடு செய்ததை அடுத்து அது ஒத்தி போடப்பட்டது குறிப்பிடத்தக்கது. [ஒ 16]

நவசமசமாஜக் கட்சி:

யுத்தத்தை நிறுத்துமாறு மேதினக் கோஷம்

நவசமசமாஜக் கட்சி இவ்வாண்டு நடத்தும் மேதின விழாவின் போது வடக்கு— கிழக்கு யுத்தத்தை உடனடியாக முடிவுக்குக் கொண்டு வரும்படி வலியுறுத்தவுள்ளது.

நவசமசமாஜக் கட்சியின் தலைவர் வாசுதேவ நாணயக்கார கட்சியின் மேதினப் பேரணியின் நோக்கங்கள் குறித்து வெளியிட்ட அறிக்கையில் இதனைத் தெரிவித்துள்ளார்.

வடக்கு— கிழக்கில் சமாதானத்தை ஏற்படுத்துவதற்கான அரசியல் நடவடிக்கைகளை மேற்கொள்ளும்படியும் அரசாங்கத்தை நவசமசமாஜக்கட்சி கோருவதாகவும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

புலிகளின் குரல் வானொலியில்

20-04-1994
புதன் இரவு

- ★ 8-01 — அன்னை பூபதியின் ஆறாம் ஆண்டு நினைவை முன்னிட்டு நடைபெற்ற எழுச்சி நாள் நிகழ்ச்சிகளின் தொகுப்பு.
- ★ 8-30 — செய்திகள்
- ★ 8-40 — நாடகம் "தியாகங்கள் தொடரும்"

21-04-1994
வியாழன் காலை

- ★ 7-02 — மாவீரர் வணக்கம்
- ★ 7-15 — விடுதலை கீதங்கள்
- ★ 7-45 — செய்திகள்
- ★ 7-50 — பத்திரிகைச் செய்திகள்
- ★ 7-55 — தாயகப் பாடல்

வர்த்தகர்கள் கைதாகினர்

தென்மராட்சி, ஏப். 20

கட்டுப்பாட்டு விலையை விட கூடுதல் விலைக்கு அரிசி விற்பனை செய்த வர்த்தகர்கள் சாவகச்சேரி காவல் துறையினரால் கைது செய்யப்பட்டனர்.

சாவகச்சேரியில் நான்கு வர்த்தகர்களும் கொடிகாமத்தில் ஒரு வர்த்தகரும் கைதாகினர். விசாரணை நடத்தப்பட்டு வருகிறது. (ஒ-117)

அன்னை பூபதி நினைவுப் போட்டி கோட்ட ரீதியில் பரிசுபெறுவோர்

யாழ்ப்பாணம், ஏப். 20

அன்னை பூபதி நினைவுப் போட்டி அறிவுத் தேர்வில் தேசிய கோட்ட மட்டங்களில் சிறப்புத் தேர்ச்சிபெற்ற மாணவர்களின் பெயர்கள் நேற்றைய உதயனில் வெளியாகின. அதன் தொடர்ச்சி இன்று வெளியிடப்படுகிறது.

சண்டிலிப்பாய்

ஆண்டு 6 கமலஜவிஸ்ரா இராசரத்தினம் - சண்டிலிப்பாய் இந்து தமிழ் வித்தி.

ஆண்டு 8 தேவசேனாதிபதி சுகந்தன் - சண்டிலிப்பாய் இந்து தமிழ் வித்தி.

ஆண்டு 8 கங்கா கந்தசாமி- பிரான்பற்று கலைமகள் வித்தியாலயம்.

ஆண்டு 11 கணேசநாதன் சிறீவிசாகன் - இளவாலை ஹென்றியரசர் கல்லூரி.

ஆண்டு 12 ம. றெபெட்ஷஜி- இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி.

ஆண்டு 12 தம்பித்துரை சந்திரகாந்- மானிப்பாய் மெமோறியல் ஆங்கில பா.

உடுவில்

ஆண்டு 6 தங்கராசா தனுஷன் - ஏழாலை சிறீ முருகன் வித்தி.

ஆண்டு 6 செல்வராஜா நிர்மலரஜனி - ஏழாலை சிறீ முருகன் வித்தி.

ஆண்டு 6 இராசகுமார் செல்வச்சந்திரன் - உடுவில் முருகமூர்த்தி வித்தி.

ஆண்டு 8 தங்கராசா கிருபாகரன் - ஏழாலை சிறீ முருகன் வித்தி.

ஆண்டு 11 வேலாயுதபிள்ளை சுதாஸ்கரன் - இணுவில் மத்திய கல்லூரி.

ஆண்டு 11 சிறீதேவி தெய்வேந்திரன் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி.

ஆண்டு 8 தர்சினி விஜயகுமார் - இராமநாதன் கல்லூரி.

ஆண்டு 12 தேவராஜா தனலட்சுமி - இணுவில் மத்திய கல்லூரி.

ஆண்டு 12 சந்தானகிருஷ்ணன் சுபாங்கி - இணுவில் மத்திய கல்லூரி.

கோப்பாய்

ஆண்டு 6 கஜேந்தினி வல்லிபுரம் - அச்சுவேலி சரஸ்வதி வித்தியாலயம்.

ஆண்டு 6 சந்திரவதனி சாம்பசிவம் - அச்சுவேலி சரஸ்வதி வித்தி.

ஆண்டு 6 சிறீவதனி செல்லத்துரை அச்சுவேலி சரஸ்வதி வித்தி.

ஆண்டு 6 ஆனந்தரூபி சிவலிங்கம்-ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தி.

ஆண்டு 6 சுந்தரலிங்கம் தயாகரன்-சிறுப்பிட்டி அ. த. க. பா.

ஆண்டு 7 நடராசா காண்டீபன் - பத்தைமேனி இரத்தினேஸ்வரி வித்தியாலயம்.

ஆண்டு 7 மரின் சுஜாத்தா அன்ரனி இம்மானுவேல் - ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலயம்.

ஆண்டு 8 குமாரசாமி ஞானமூர்த்தி - வாதரவத்தை விக்னேஸ்வரா

ஆண்டு 8 சுகந்தினி தளையசிங்கம் - ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தி.

ஆண்டு 9 செல்லத்துரை சபேசன் - கோப்பாய் கிருத்தவக் கல்லூரி

ஆண்டு 9 ராதிகா முருகதாஸ் - ஆவரங்கால் நடராஜ இராமலிங்கம் வித்தி.

ஆண்டு 9 செல்வரட்ணம் சிறீகாந்த் - அச்சுவேலி சரஸ்வதி வித்தி.

ஆண்டு 10 வதனகீர்த்தனா மயில்வாகனம் - ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தி.

ஆண்டு 10 வத்சலா பாலசுப்பிரமணியம் - சிறிசோமஸ்கந்தாக் கல்லூரி

ஆண்டு 10 அனுராதா இராமநாதன் - சிறிசோமஸ்கந்தாக் கல்லூரி

ஆண்டு 11 குணரத்தினம் லீலானந்தன் - சிறிசோமஸ்கந்தாக் கல்லூரி

ஆண்டு 11 தெய்வேந்திரம் ஞானகுமரன் - சிறிசோமஸ்கந்தாக் கல்லூரி

ஆண்டு 12 குமாரசாமி கிரிதரன் - இடைக்காடு ம. வி.

ஆண்டு 12 சுஜித்திரா நகுலேசபிள்ளை - உரும்பிராய் இந்துக் கல்லூரி.

தெல்லிப்பளை

ஆண்டு 6 பிரியதர்சினி அருணாசலம் - மல்லாகம் ம. வி.

ஆண்டு 7 சுலோசனா நவரத்தினம் - குளவெட்டி சீனன்கலட்டி ஞானோதய வித்தி.

ஆண்டு 8 சடராஜசர்மா சுதர்சன்சர்மா - மகாஜனக் கல்லூரி.

ஆண்டு 8 மணியம் மயூரன்- வயாவிளான் ம. ம. வி.

ஆண்டு 10 சிவஞானசுந்தரம் நயாபரன் - மல்லாகம் ம. ம. வி.

ஆண்டு 10 வைத்தீஸ்வரன் கிரிதர் - மகாஜனக் கல்லூரி

ஆண்டு 11 செங்காதரன் இந்திரமோகன் - யூனியன் கல்லூரி.

ஆண்டு 11 யோகநாதன் சிவராஜ் - யூனியன் கல்லூரி

ஆண்டு 12 சச்சிதானந்தம் சஞ்சயன் யூனியன் கல்லூரி.

ஆண்டு 12 முருகையா சிவானந்தன் - வயாவிளான் ம. ம. வி.

ஆண்டு 12 சிவாஜினி விநாயகஈஸ்வரன் வயாவிளான் ம. ம. வி.

யாழ்ப்பாணம்

ஆண்டு 7 பிரியதர்சினி சுப்பிரமணியம் - [illegible] கல்லூரி.

ஆண்டு 7 [illegible] இராமநாயகம் - வேம்படி மகளிர் கல்லூரி.

ஆண்டு 8 மனோரதி மனோகரன் - சுண்டிக்குளி மகளிர் கல்லூரி.

ஆண்டு 8 ஜெனா இராஜநாயகம் வேம்படி மகளிர் கல்லூரி.

ஆண்டு 10 சிவகௌரி யோலிங்கம் - வேம்படி மகளிர் கல்லூரி.

ஆண்டு 10 நளாயினி நல்லதம்பி - வேம்படி மகளிர் கல்லூரி.

ஆண்டு 11 வெண்ணிலா சிவலோகநாதன் - வேம்படி மகளிர் கல்லூரி.

ஆண்டு 11 சயந்தினி பொன்னுத்துரை வேம்படி மகளிர் கல்லூரி

ஆண்டு 12 சிவதர்சினி சிவசுப்பிரமணியம் - வேம்படி மகளிர் கல்லூரி.

ஆண்டு 12 ஜெயமாலா தர்மலிங்கம் - வேம்படி மகளிர் கல்லூரி.

நல்லூர்

ஆண்டு 6 வில்வநாதன் விபுலன் - யாழ். இந்துக்கல்லூரி

ஆண்டு 6 சிவபாலன் சபேசன் - யாழ் இந்துக் கல்லூரி.

ஆண்டு 7 தில்லைநாதன் கோபிநாத் - யாழ். இந்துக் கல்லூரி.

ஆண்டு 7 ஜெகராசா சசீந்திரன் - யாழ். இந்துக் கல்லூரி.

ஆண்டு 8 சிவகுருநாதர் செந்தூரன் யாழ். இந்துக் கல்லூரி.

ஆண்டு 8 ரவீந்திரநாதன் சுரேசன் - கொக்குவில் இந்துக் கல்லூரி.

ஆண்டு 9 ஆனந்தலிங்கம் சதீஸ் - யாழ். இந்துக் கல்லூரி.

ஆண்டு 9 அலோசியஸ் அமிர்தநாதன் (பிரணன்) இந்துமகளிர் கல்லூரி.

ஆண்டு 10 கனகரட்ணம் காண்டீபன் - யாழ் இந்துக் கல்லூரி.

ஆண்டு 10 சொர்ணலிங்கம் தேவலிங்கம் - யாழ். இந்துக் கல்லூரி.

ஆண்டு 11 பதுமநாதன் கஜன் - யாழ். இந்துக் கல்லூரி.

ஆண்டு 11 யோகராஜா சிவாகரன் - யாழ். இந்துக் கல்லூரி.

ஆண்டு 12 பாலச்சந்திரன் சுதாசன் - யாழ். இந்துக் கல்லூரி.

ஆண்டு 12 சதாசிவம் ராஜீவ் - யாழ். இந்துக் கல்லூரி.

ஆண்டு 12 சங்கரப்பிள்ளை வசந்தன் - யாழ். இந்துக் கல்லூரி.

ஆண்டு 12 தர்மராஜா [illegible] - யாழ். இந்துக் கல்லூரி.

(தொடரும்)

கல்முனை கடலில் பீரங்கித் தாக்கு

யாழ்ப்பாணம், ஏப். 20

நேற்றுக் காலை 7-15 மணியளவில் பூநகரி — கல்முனை கடற்பிராந்தியத்திற்கு வந்த பீரங்கிப் படகுகளில் இருந்து கடற்படையினர் பீரங்கித் தாக்குதல்களை நடத்தினர்.

இதனை அடுத்து தொழிலில் ஈடுபட்டிருந்த மீனவர்கள் தொழிலை இடைநடுவில் கைவிட்டு விட்டு கரைக்குத் திரும்பினர். [ஒ-165-15-17]

இசையாராதனை

யாழ்ப்பாணம், ஏப். 20

நல்லூர் ஸ்ரீ ராகவேந்திர சுவாமிகள் மிருதிகா பிருந்தாவனத்தில் நாளை மாலை 4-30 மணிக்கு நடைபெறும் இசையாராதனை நிகழ்ச்சியில் 'இசைக்கலைமணி' பூர்ணலதா கைலாயநாதன் பாடுவார்.

வித்துவான் ஆர்.எஸ்.கேசவமூர்த்தி வயலினும், 'மிருதங்க கலைமணி' க. கண்ணதாசன் மிருதங்கமும், செல்வன் ரதிருபன் கடமும், எல். ராஜா முகர்சிங்கும் வாசிப்பார்கள். (ஒ-3)

கணக்குப் பதிவாளர் பரீட்சை ஒத்திவைப்பு

கணக்குப் பதிவாளர் பதவி உயர்வுப் பரீட்சை எதிர்வரும் 7 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக யாழ். அரச அதிபருக்கு நேற்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இப்பரீட்சை கொழும்பில் நடைபெறவிருக்கிறது. [உ-3]

நாளை தேர் வெள்ளோட்டம்

யாழ்ப்பாணம், ஏப். 20

யாழ்ப்பாணம் சுவிபங்காடு ஸ்ரீ பத்திரகாளி சமேத ஸ்ரீ வீரபத்திரர் சுவாமி கோயில் புதிய சித்திரத் தேர் வெள்ளோட்ட விழாவும், மலர் வெளியீடும் நாளை வியாழக்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறும்.

நல்லை ஆதீன முதல்வர், சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி ஆகியோரின் ஆசியுரைகள் இடம்பெறும்.

சிற்பகலாஜோதி திரு. ஆர். ஜீவரத்தினம் விழாவில் கௌரவிக்கப்படுவார்.

சேவைக்கால கருத்தரங்கும் செயலமர்வும்

யாழ்ப்பாணம், ஏப். 20

யாழ்ப்பாணம், நல்லூர் ஆகிய கோட்டப் பாடசாலைகளில் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான சேவைக்கால பயிற்சி வகுப்புகள் இன்றும் நாளையும் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமையும், சனிக்கிழமையும் நடைபெறும்.

தமிழ், ஆங்கிலம், விஞ்ஞானம், கணித பாட ஆசிரியர்களுக்கான வகுப்புகள் வேம்படி மகளிர் கல்லூரி, யாழ். இந்துக் கல்லூரியிலும் —

சைவசமயம் வேம்படி மகளிர் கல்லூரியிலும் —

வர்த்தகம், விவசாயம், உடற்பயிற்சி யாழ் இந்துக் கல்லூரியிலும் நடைபெறும்.

இப்பயிற்சி வகுப்புகளுக்குத் தேவையான கடந்த தவணை பரீட்சை வினா விடைத்தாள்கள், புள்ளித் திட்டம், உபகரணங்கள் ஆகியவற்றையும் கொண்டுவருமாறு சம்பந்தப்பட்ட ஆசிரியர்களை பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு சி. புவேந்திரன் கேட்டுள்ளார். [ஓ-162]

ஐ. தே. க தலைமை...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

யும் என்றும்—

எதிர்காலத்தில் தேர்தல்களைச் சந்திப்பதற்குச் சாதகமான நிலையில் உள்ள பொது மக்கள் ஐக்கிய முன்னணிக்கு இது பலத்தைக் கூட்டும் என்றும் அரசியல் விமர்சகர்கள் தெரிவிக்கின்றனர். (ஓ எ-6)

அன்னை பூபதி......

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

செலுத்தினர்.

அன்னை பூபதியின் தியாகத்தை நினைவூட்டும் விதத்தில் குடாநாடெங்கும் பதாகைகள் தொங்கவிடப்பட்டிருந்தன. வீதிகள் யாவும் எழில் கொழிக்க அலங்கரிக்கப்பட்டிருந்தன. அன்னைக்கு அஞ்சலி செலுத்தும் பாடல்களும் மற்றும் எழுச்சி கீதங்களும் காற்றை நிறைத்தன.

தமிழ் மக்களின் விடுதலைக்காக தன்னுயிரை ஈந்த அன்னைக்கு, அஞ்சலி செலுத்தும் எழுச்சி பொங்கும் நிகழ்வுகளில் மக்கள் உணர்வுபூர்வமாகக் கலந்து கொண்டதைக் காணமுடிந்தது.

நேற்று வர்த்தக நிலையங்களும் சந்தைகள் என்பன மூடப்பட்டிருந்தன. (அ-162-17-13-155)

புத்தகப் பதிவாளர் நியமனம் சனியன்று போட்டி பரீட்சை

தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையால் நடத்தப்படும் புத்தகப் பதிவாளர் நியமனத்திற்கான போட்டிப் பரீட்சை எதிர்வரும் 23ஆம் திகதி சனிக்கிழமை காலை 10-00 மணிக்கு யாழ். வேம்படி மகளிர் கல்லூரியிலும், யாழ். மத்திய கல்லூரியிலும் நடைபெறும்.

பரீட்சார்த்திகள் காலை 9-40 மணியளவில் பரீட்சை நிலையத்திற்கு சமுகமளிக்குமாறு வேண்டப்படுகின்றனர். 5651 — 5844 வரையுள்ள சுட்டிலக்கமுள்ள பரீட்சார்த்திகளுக்கு யாழ். மத்திய கல்லூரியில் பரீட்சை நடைபெறும். மேற்படி கட்டிடத்தில் உள்ள பரீட்சார்த்திகள் இம்மாற்றத்தை கவனத்திற் கொள்ளவும்.

இதற்கான அனுமதி அட்டைகள் தகுதியான பரீட்சார்த்திகளுக்கு அனுப்பப்பட்டுள்ளன. கிடைக்கப் பெறாதவர்கள் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை, மாவட்ட அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் தொடர்பு கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டது.

கையொப்பம் உறுதிப்படுத்தப்பட்ட அனுமதி அட்டையையும், அடையாள அட்டையையும் எடுத்து வருமாறு கேட்கப்பட்டுள்ளது. (ஒ)

மூடிக்கிடக்கும் ஆலயங்கள் மீளத் திறக்கப்பட வேண்டும்

இந்து பேரவை மாநாட்டில் தீர்மானம்

★ யுத்த நிறுத்தம் ஒன்று ஏற்படுத்தப்பட்டு வடக்கு-கிழக்கு பிரச்சினை பேச்சுவார்த்தை மூலம் தீர்க்கப்பட வேண்டும்.

★ வடக்கு - கிழக்குப் பகுதிகளில் வழிபட முடியாமல் மூடிக்கிடக்கும் இந்து வழிபாட்டுத் தலங்கள் மீளத் திறக்கப்பட வேண்டும்.

★ வடக்கில் யுத்த சூழ்நிலையால் சீரழிந்து போயுள்ள இந்து அமைப்புகள் மீள சீரமைக்கப்பட வேண்டும்.

★ தென்பகுதியில் உள்ள இந்துமத குருமாரும், இந்து அமைப்புக்களின் பிரதிநிதிகளும் வடக்கே சென்று அங்குள்ள நிலைமைகளை நேரில் பார்த்து அறிந்து கொள்ள வேண்டும்.

கடந்த மார்ச் மாதம் 26 ஆம், 27ஆம் திகதிகளில் கல்முனை இராமகிருஷ்ணாலய சங்க மகாவித்தியாலயத்தில் நடைபெற்ற இலங்கை இந்து இளைஞர் பேரவையின் பதினொராவது தேசிய மாநாட்டில் முன்கண்ட தீர்மானங்கள் எடுக்கப்பட்டன.

யாழ். மாவட்டத்தில் இருந்து யாழ் மாவட்ட இந்து இளைஞர் பேரவை செயலாளர் திரு ப. [illegible] லோகநாதன் மற்றும் திரு மு. தில்லைநாதன் ஆகியோர் அந்த மாநாட்டில் கலந்து கொண்டனர்.

இலங்கை இந்து இளைஞர் பேரவைத் தலைவர் திரு. வ. முருகப்பன் தலைமையில் மாநாடு நடைபெற்றது.

★ போக்குவரத்து நிலைமைகள் காரணமாக யாழ்ப்பாணத்தில் இருந்து சென்ற பிரதிநிதிகள் மாநாட்டின் இரண்டாம் நாள் நிகழ்விலேயே கலந்து கொண்டனர்.

நாளை

அச்சுவேலி, ஏப். 20

அச்சுவேலி சரஸ்வதி வித்தியாசாலையின் பரிசளிப்பு விழா நாளை வியாழக்கிழமை அதிபர் திருமதி ச. வனராசா தலைமையில் நடைபெறும். (ஒ-11)

நம் நாடு உயர்வாகும்
நாடெல்லாம் பயிர்செய்தால்

எடிசன் அக்கடமி
(யாழ். இந்துக்கல்லூரி அருகில்)
4/1/1, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

பிரத்தியேக கணித வகுப்பு

O/L கணிதம்

ஆசிரியர்
திரு. B.P. பாஸ்கரன்

Sat. & Sun Class: சனி. ஞாயிறு பி. ப. 3 மணி
Evening Class திங. வெள். பி. ப. 4 மணி

ஆரம்பம்:- 22-04-1994
வெள்ளி பிற்கல் 4 மணி

★ பாடத் திட்டத்துடன் கடந்த 18 வருட வினாக்களும் மீட்கப்படும்
★ O/L பரீட்சையில் கணிதத்தில் சித்தியடையாத மாணவர்களுக்கென்றே இவ்வகுப்புகள் விசேடமாக ஆரம்பிக்கப்படுகின்றன
★ ஆரம்ப அடிப்படையில் இருந்து தொடர் பரீட்சைகள் மூலம் போதிக்கப்படும்

(இ/7793)

ST. JOHN'S INSTITUTE FOR CAREER GUIDANCE IN

COMPUTER STUDIES

COMPUTER HOURS AVAILABLE

Those who have Computer khowledge May hireout Computer Hours from our Institution for further details and for Booking of Computer Hours Please Contact Our Office.

COMPUTER COURSES

We offer the following Computer Courses
1) Introduction to Computers and G W BASIC
2) PASCAL
3) d BASE Three plus

Practicals on IBM Compatible XT/AT Machines.

Our next Batches of Computer Courses are Commencing on 20th April 1994 at 5 p m.

Office Address
St John's Church
Chundikuli,
Jaffna

Office Hours
Monday – Friday
8 30 a m – 4 30p m

(C-7791)

மரண அறிவித்தல்கள்

திருமதி கனகசபை வள்ளியம்மை

சாவகச்சேரியைச் சேர்ந்த திருமதி கனகசபை வள்ளியம்மை 19 - 04 - 94இல் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கார்த்திப்பிள்ளை கனகசபையின் (ஓய்வுபெற்ற தபாலதிபர்) அன்பு மனைவியும், காலஞ்சென்ற ஞானச்சந்திரன் (முன்னாள் அரச அதிபர் முல்லைத்தீவு), பாலச்சந்திரன் (ஓய்வுபெற்ற அதிபர் சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரி), திருமதி யோகேஸ்வரி பாலசுப்பிரமணியம் (ஓய்வுபெற்ற ஆசிரியை சாவகச்சேரி இந்துக்கல்லூரி), புவனேஸ்வரி நாகராஜா, காலஞ்சென்ற மனோச்சந்திரா (லண்டன்), பூரணச்சந்திரன் (பிராந்திய இயக்குநர் புறோமோட்டர்ஸ் என்ஜினியரிங் கொம்பனி) ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற பாலசுப்பிரமணியம் (பொறியியலாளர் மின்சாரசபை), கலாநிதி நாகராஜா (விவசாய ஆராய்ச்சியாளர் கண்டி), சரோஜினிதேவி (மனோ), சுமங்கலாதேவி (சாரதா), மணிமேகலாதேவி, சோதிலக்சுமி ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இலக்கம் 49, விதானையார் வீதி, சுண்டிக்குளி இல்லத்தில் இன்று (20-04-94) புதன்கிழமை காலை 9 மணிக்கு நடைபெற்று பூதவுடல் துண்டி மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
க. பாலச்சந்திரன்
(மகன்)
க. பூரணச்சந்திரன்
(மகன்)

49, விதானையார் வீதி,
சுண்டிக்குளி.
(30488)

நடராசா நடேசன் (கோத்தன்)

புங்குடுதீவு 12 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் இல 20 பிரப்பன்குள லேனில் வசித்தவருமாகிய நடராசா நடேசன் காலமானார்.

இவர் காலஞ்சென்ற நடராசா கமலாம்பிகை தம்பதிகளின் அன்பு மகனும், கோணேஸ்வரன் (ஜேர்மனி), மங்கையர்க்கரசி (ஜேர்மனி), புஷ்பராணி ஆகியோரின் அன்புச் சகோதரனும் சியாமளா (ஜேர்மனி), தயாபரன் (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரது பூதவுடல் நேற்று (19-4-94) செவ்வாய்க்கிழமை கோம்பயன் மணல் மயானத்தில் தகனம் செய்யப்பட்டது என்பதை உற்றார், உறவினர், நண்பர்கள் ஆகியோருக்கு அறியத்தருகின்றேன்.

தகவல்:
மு. சிவலோகநாதன்
(சகோதரன்)

இல. 20, பிரப்பன்குள லேன்,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.
(30941)

திருமதி

செல்லம்மா சின்னத்துரை

திருமதி செல்லம்மா சின்னத்துரை காலமானார்.

விமன்காமம் வடக்கு, தெல்லிப்பளையைப் பிறப்பிடமாகவும், சுதுமலை மேற்கு, மானிப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட இவர் 18 - 4 - 94 [திங்கள்] கொழும்பில் காலமானார். இவர் காலஞ்சென்ற ஆசிரியர் சின்னத்துரை அவர்களின் அன்பு மனைவியும், விக்னேஸ்வரன் [மருந்தாளர் அரசினர் வைத்தியசாலை சங்கானை], ஜெகதீஸ்வரன் [ஓமான்], சுதனேஸ்வரன் [அமெரிக்கா], யோகேஸ்வரன் [மாலைதீவு], விமலேஸ்வரன் [நோர்வே] ஆகியோரின் அன்புத் தாயாரும்; உஷா, சித்ராதேவி, சுசீலா, சாந்தி ஆகியோரின் அன்பு மாமியாரும்; செல்லநாயகி [அம்மாப்பிள்ளை]யின் அன்புச் சகோதரியும்; இராசரத்தினம் [தம்பாபிள்ளை], கணபதிப்பிள்ளை, மனோன்மணி, காலஞ்சென்ற இலட்சுமிப்பிள்ளை ஆகியோரின் மைத்துனியும்; ஷாரங்கன், ராதேயன், ரம்யா, சஜந்தன், அனுஷன், ஆர்த்தி, அரவிந், சத்ருக்னன், ஜனகன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிச் சடங்குகள் கொழும்பில் நடைபெறும்.

தகவல்:
சி. விக்னேஸ்வரன்
[மகன்]

பட்டின சபை ஒழுங்கை,
சுதுமலை மேற்கு,
மானிப்பாய்
[30490]

சோமசுந்தரம் சின்னம்மா

பூநகரி அத்தாயைச் சேர்ந்த வைத்திலிங்கம் சோமசுந்தரத்தின் மனைவி சின்னம்மா [19 - 4 - 94] செவ்வாய்க்கிழமை திருநெல்வேலியில் காலமானார்.

இவர் திருமதி நாகேஸ்வரி கனகரத்தினம், (கொழும்பு), திருமதி விஜயலட்சுமி ருக்மாங்கதன் [கனடா], திருமதி இராஜேஸ்வரி தேவராஜா [ஜேர்மனி], ஆகியோரின் அன்புத் தாயும், சி. கனகரத்தினம் [ஓய்வுபெற்ற M. L. T – கொழும்பு] ஜ. ருக்மாங்கதன் [கனடா], கோ. தேவராஜா [ஜேர்மனி] ஆகியோரின் அன்பு மாமியாரும், மனோகரன் [கனடா], வசீகரன் [அமெரிக்கா], தேன்மொழி [சங்கீத ஆசிரியை கொழும்பு], அருள்மொழி [கொழும்பு] கருணாகரன் [லண்டன்], குகப்பிரியா [கனடா] அருள்பிரியா [கனடா] ஆரூரன் [கனடா], மயூரன் [ஜேர்மனி], ஜெகனி [ஜேர்மனி] ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்:
S. முத்துலிங்கம்

வளாக வீதி, திருநெல்வேலி.
[30489]

திருமதி இராசம்மா செல்லத்துரை

சுன்னாகம் வரியப்புலத்தைச் சேர்ந்த திருமதி இராசம்மா செல்லத்துரை 15 - 04 - 94 இல் சிவபதமடைந்துள்ளார். 16 - 04 - 94 உதயன் மரண அறிவித்தலின் பிரகாரம் அன்னாரின் இறுதிக் கிரியைகள் வரியப்புலம் சுன்னாகத்தில் உள்ள அன்னாரின் இல்லத்தில் இன்று புதன்கிழமை [20 - 4 - 94] அன்று காலை 10.00 மணிக்கு நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக சுன்னாகம் சொத்திபாலை மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும் என்பதனை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத் தருகின்றோம்.

தகவல்:
டாக்டர் புனிதவதி ஜெகதீசன்
(மகள்)

[7078]

ஊரெழு கம்பன் விழா நாளைய நிகழ்ச்சிகள்

யாழ்ப்பாணம், ஏப். 20

ஊரெழு கம்பன் விழா நாளை வியாழக்கிழமை மாலை 5 மணிக்கு ஊரெழு வீரகத்தி விநாயகர் ஆலயத் திருவீதியில் உள்ள தமிழ்த்தாய் அரங்கில் ஆரம்பமாகும்.

பேராசிரியர் அ. சண்முகதாஸ் தலைமையில் நடைபெறும் ஆரம்ப விழாவில் பேராசிரியர் வ. ஆறுமுகம் தொடக்கவுரையையும், யாழ். இந்துக் கல்லூரி அதிபர் திரு. அ. பஞ்சலிங்கம் சிறப்புரையையும் நிகழ்த்துவார்கள். சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி, திரு. க. சிவராமலிங்கபிள்ளை ஆகியோர் ஆசியுரை வழங்குவார்கள்.

தொடர்ந்து திரு இ. ஜெயராஜ், திரு. க. நாகேஸ்வரன் திரு. எம். எஸ். தயாளன் ஆகியோரை நடுவர்களாகக் கொண்டு பட்டி மண்டப நிகழ்ச்சியும் நடைபெறும். (ச)

இலங்கை செஞ்சிலுவைச் சங்கம்
யாழ். கிளைத்தலைமையகம்
செஞ்சிலுவைச் சங்கத்தினை உருவாக்கிய

ஜீன் ஹென்றி டுனால்ட்

அவர்களின் தினத்தை
08 05-1994 இல்

அங்கத்தவர்களின் எழுச்சிநாளாக யாழ். கிளைத் தலைமையகத்தில் கீழ்வரும் நிகழ்ச்சிகள் நடத்தப்படும்.

1. கால் வழங்காதவர்களுக்கான முச்சக்கர வண்டி ஓட்டப்போட்டி:- (முச்சக்கரவண்டிகளைத் தாங்களே கொண்டு வருதல் வேண்டும்) நேரம் மு. ப. 7 மணி
2. வாய் பேச முடியாதவர்களுக்கான படம் வரைதல் போட்டி:- (உபகரணங்களைத் தாங்களே கொண்டு வருதல் வேண்டும்) நேரம் மு. ப. 10 மணி
3. விழிப்புணர்வற்றோர்களுக்கான கவிதை புனைதல் போட்டி:- நேரம் மு. ப. 10 மணி

பிற்பகல் 3 மணிக்கு பரிசு வழங்கல் நடைபெறும்.

போட்டியில் பங்குபற்ற விரும்புவோர் கிளைக்கு 03-05-94 இற்கு முன்பாக தங்கள் விண்ணப்பங்களை அனுப்பி வைத்தல் வேண்டும்.

அன்றைய தினம் இரத்ததானம் செய்ய விரும்பும் தொண்டர்களும், உறுப்பினர்களும் பிரிவுகள் மூலமாக யாழ் போதனா வைத்தியசாலை அல்லது பருத்தித்துறை ஆதாரவைத்தியசாலை ஆகியவற்றில் இரத்ததானம் செய்யும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

73, கண்டி வீதி,
யாழ்ப்பாணம்,
19-04-94.

செஞ்சிலுவைச் சங்க சேவையில்,
கௌரவ செயலாளர்
(சி/7789)

ஆறாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்:
28
—
10
—
1926

மறைவு:
26
—
04
—
1988

அமரர் மகேஸ்வரி திருநாவுக்கரசு

(யாழ். மத்திய கல்லூரி இளைப்பாறிய ஆசிரியை)

ஆண்டு ஆறா(ம்) அரனடி சேர் அன்னை
வேண்டும் வரத்தால் விண்ணுறைய அஞ்சலித்தோம்

குடும்பத்தினர்

29/5, தேவாலய வீதி,
ஒட்டுமடம்,
யாழ்ப்பாணம்.
(சி/7790)

மரண அறிவித்தல்கள்

திருமதி இரத்தினம் பொன்னுச்சாமி

(பொன்னு)

மானிப்பாய் நாவலடி ஒழுங்கையைப் பிறப்பிடமாகக் கொண்ட திருமதி இரத்தினம் (பொன்னு) பொன்னுச்சாமி 16-4-94 இல் சிவபதமடைந்தார்.

இவர் காலஞ்சென்ற பொன்னுச்சாமி B-C-C) அவர்களின் அன்பு மனைவியும், ஸ்ரீஸ்கந்தராசாவின் (B-C-C) அன்புத்தாயாரும், இந்திராவின் மாமியும், ஸ்ரீதேவி, வாசினி, கனி ஆகியோரின் பேர்த்தியும், திருமதி இராசமணியின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற சரவணமுத்துவின் மைத்துனியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 17-4-94 இல் கொழும்பில் நடைபெற்றன. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

தகவல்:-
திருமதி இ. சரவணமுத்து
(சகோதரி)

நாவலடி ஒழுங்கை,
மானிப்பாய்.
[30492]

நாகலிங்கம் சிவபாலசிங்கம்

(ஓய்வுபெற்ற ஓவசியர், T.O. பட்டினசபை, சுன்னாகம்)

உடுவிலைப் பிறப்பிடமாகவும், மானிப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட நாகலிங்கம் சிவபாலசிங்கம் காலமானார்.

இறுதிக்கிரியைகள் இன்று (20-4-94) புதன்கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பிப்பிலி மயானத்தில் தகனம் செய்யப்படுமென்பதை உற்றார், உறவினர், நண்பர்களுக்கு அறியத்தருகின்றோம்.

தகவல்:
சி. சசிக்குமார்
[மகன்]

சங்கரப்பிள்ளை வீதி,
மானிப்பாய்.
(30483)

பதிவாளர்கள் கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஏப். 20

யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த பிறப்பு, இறப்பு, விவாகப் பதிவுகளை மேற்கொள்ளும் அனைத்துப் பதிவாளர்களுக்கான கலந்துரையாடல் ஒன்று நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை காலை 10 மணியளவில் தமிழீழ நீதி நிர்வாகத்துறையின் நடுவப்பணியகத்தில் நடைபெறவுள்ளது.

இக்கலந்துரையாடலில் பதிவாளர்கள் அனைவரையும் தவறாது சமூகமளிக்குமாறு தமிழீழ நீதி நிர்வாகத் துறையினர் கேட்டுக் கொள்கின்றனர். [ஒ]

ஆலயங்களில்

மீசாலை வடக்கு வேம்பிராய் கான்றைச்சாட்டி ஆலாக்கிரக பூதவரத விநாயகர் (கலட்டியிற் பிள்ளையார்) கோவில் அலங்கார உற்சவம் இன்று புதன்கிழமை பகல் 108 சங்காபிஷேகத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து ஒன்பது தினங்கள் நடைபெறும்.

10 ஆம் நாளான எதிர்வரும் 29ஆம் திகதி காலை 8-00 மணிக்கு 1008 சங்காபிஷேகமும் இரவு விசேஷ நிகழ்ச்சிகளும் இடம்பெறும்.

(ஒ-80)

இன்று

தென்மராட்சி, ஏப். 20

தென்மராட்சி தொலைக் கல்விப் பிராந்திய நிலையத்தில் பயிற்சி பெறும் ஆசிரிய மாணவர், போதனாசிரியர்களுக்கான கலந்துரையாடல் இன்று புதன்கிழமை சாவகச்சேரி மகளிர் மகா வித்தியாலயத்தில் நடைபெறும் என தென்மராட்சி கோட்டப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் திருமதி புஸ்பா கணேசலிங்கம் அறிவித்துள்ளார் [ஒ-117]

விளையாட்டு அரங்கு திறப்புவிழா

அச்சுவேலி, ஏப். 20

அச்சுவேலி சரஸ்வதி வித்தியாசாலையின் மாவீரர் விளையாட்டு அரங்கு திறப்பு விழா இன்று புதன்கிழமை நடைபெறும்.

யாழ். மாவட்ட அரசியல் துறை துணைப் பொறுப்பாளர் திரு. செ. இளையவன் விளையாட்டு அரங்கைத் திறந்து வைப்பார். அதைத் தொடர்ந்து கரப்பந்தாட்டம், வலைப்பந்தாட்டம், தாச்சிப் போட்டி என்பன நடைபெறும். (ஒ-11)

பிற்போடப்பட்டது

தொண்டமானாறு வெளிக்கள நிலைய இளம்மன்றத்தினரால் வடமராட்சி ஜி. சீ. ஈ. உயர்தர மாணவர்களுக்கென இன்று புதன்கிழமை நடத்தப்படவிருந்த பௌதிகவியல் கருத்தரங்கு தவிர்க்கமுடியாத காரணத்தினால் பிற்போடப்பட்டுள்ளதாக அறிவிக்கப்படுகிறது. (ஒ)

A/L 96
கணக்கியல்
வகுப்பு

ஆரம்பம்:
1994-04-25
திங்கள் மாலை 4 மணி

★ அனுமதிகளை முன்கூட்டியே பெறவும்.

ஆசிரியர்
D. SAM
76/2. Temple Road,
Jaffna
(30269)

பொது மக்களுக்கு
ஓர் அன்பான வேண்டுகோள்

மக்கள் அபிமானத்தைப் பெற்ற
ஸ்ரீ லங்கா அச்சகம்
(உரிமையாளர் சண்முகம் சிவராமன்)

ராஜா தியேட்டர் அருகாமையில் உள்ள
ஸ்ரீ காந்தா அச்சக லேனில் தனது
சொந்த இடத்திலேயே இயங்கிக் கொண்டிருக்கின்றது

ஸ்ரீ லங்கா புத்தகசாலையில்
இயங்கும் அச்சகத்திற்கும்
எமது
ஸ்ரீ லங்கா அச்சகத்திற்கும்
எது விதமான தொடர்பும் கிடையாது.
அழகு மிகு அச்சக வேலைகளுக்கு
ராஜா தியேட்டர் அருகாமையில் உள்ள
மக்கள் அபிமானத்தைப் பெற்ற
ஸ்ரீ லங்கா அச்சகத்தையே
நாடுங்கள்
[30486]

கல்வயல் பெருங்குளம்

ஸ்ரீ அம்பலவாண வீரகத்தி விநாயகர் ஆலய

5 ஆம் நாள் உற்சவம்

இன்று மாலை நிகழ்ச்சிகள்

5 மணிக்கு ஆரம்பமாகும்
மங்கள இசை

மேற்படி தேவஸ்தான வித்துவான்கள்

★ இசைப் பேரறிஞர்
மு. பஞ்சாபிகேசன் குழுவினர்
★ இசைஜோதி
மு. ப. நாகேந்திரன் குழுவினர்
★ இசைச் செல்வன்
ரி. உதயசங்கர் குழுவினர்

பெரியமாவடி சித்திவிநாயகர்
கலைமன்ற அறிவு வட்டம் வழங்கும்

★ 'சுழலும் சொற்போர்' ★

விடயம்:

இந்து மத மக்களின் இனிய உயர்வுக்கு முந்துபணி புரிந்த முற்கால இலக்கியம்

1) வேதம் அல்ல ஆகமமே!
ஆசிரியர் ச. கோவிந்தராஜன்
2) ஆகமங்கள் அல்ல இதிகாசங்களே!
ஆசிரியர் ச, லலீசன
3) இதிகாசங்கள் அல்ல புராணங்களே!
விரிவுரையாளர் ம. நாகேஸ்வரன்
4) புராணங்கள் அல்ல திருமுறைகளே!
ஆசிரியர் ச. மனோகரராஜா
5) திருமுறைகள் அல்ல வேதங்களே!
ஆசிரியர் வ. சடாச்சரம்

கௌரவ நடுவர்
கவிஞர் த. நாகேஸ்வரன் அவர்கள்

கற்குழி பாரதி படிப்பகம் வழங்கும்

● கிதம்ப நிகழ்ச்சி ●

எம் மண்ணின் இன்னல் போக்க
வினைகள் தீர்க்கும் விக்னேஸ்வரன்
அருளைப் பிரார்த்திக்கின்றோம்.

5 ஆம் நாள் உற்சவ
கற்குழி உபயகாரர்கள்

பெருங்குளம் வீதி,
சாவகச்சேரி.

விழா சிறக்க வாழ்த்துவோர்!

அருள் முருகன் நகை மாளிகை
96/1, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

சிவா நகை மாடம்
யாழ் வீதி, சாவகச்சேரி.

(சி-7788)

எடிசன் அக்கடமி
OIL DAY CLASSES

யாழ். இந்து அருகில்
K. K. S வீதி யாழ்ப்பாணம்

கணிதம்:- B. P பாஸ்கரன்
விஞ்ஞானம்:- இரா. செல்வவடிவேல், J. J. கொலின்ஸ்
ச. கல்வி:- K. S. முத்துலிங்கம்
தமிழ்:- K இராஜலிங்கம்
ஆங்கிலம்:- C. சத்தியமூர்த்தி
வர்த்தகம்:- விக்கி

கொக்குவில் இந்து அருகில்
K. K. S. வீதி கொக்குவில்

கணிதம்:- B. P பாஸ்கரன்
விஞ்ஞானம்:- J. R சூரி, J. J. கொலின்ஸ்
ச. கல்வி:- க. கோபி
தமிழ்:- K. இராஜலிங்கம்
ஆங்கிலம்:- C. சத்தியமூர்த்தி
வர்த்தகம்:- T. தர்மராஜன்

ஆரம்பம்:- 21-04-94 வியாழன் 8 மணி
(சி/7792)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்டெட்டினரால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி, 33/8 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 20 - 04 - 1994 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.